ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2165/1 - 2020 මාර්තු මස 02 වැනි සඳුදා - 2020.03.02

*2165/1 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 02 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 1/98* (iii)

### *1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச் சட்டம்*

*1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கல், ஆபரண அதிகாரசபைச் சட்டத்தின் 14 (1) (ஊ) மற்றும் 15 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படுவதாகிய மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 53 ஆம் பிரிவின்கீழ் கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**விமல் வீரவன்ச,**
கைத்தொழில் மற்றும் வழங்கல் முகாமைத்துவ அமைச்சர்.

கொழும்பு,
*2020, பெப்புருவரி 28.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2020 ஆம் ஆண்டின் தேசிய இரத்தினக்கல், ஆபரண (இரத்தினக்கல் அகழ்தல் உரிமம்) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

1A - PG 4910 — 767 (2020/03)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*2*. ஆளொருவர், எந்தக் காணி தொடர்பில் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளதோ-

(அ) அந்தக் காணியை சொந்தமாக வைத்திருந்தாலேயொழிய;

(ஆ) அந்தக் காணியின் ஆகக்குறைந்தது மூன்றில் இரண்டு பங்கினதான சொத்தாண்மையை விண்ணப்பதாரரும் வேறு சம்மதமளிக்கும் சொந்தக்காரர்களும் சேர்த்து சொந்தமாக வைத்துள்ளார்கள் என உறுதிப்படுத்தும் வகையில் அத்தகைய வேறு சொந்தக்காரர்களுள் அத்தகைய எண்ணிக்கையினரின் எழுத்திலான சம்மதத்தினை அவர் பெற்றுக் கொண்டிருந்தாலேயொழிய; அல்லது

(இ) அந்தக் காணியின் ஆகக்குறைந்தது மூன்றில் இரண்டு பங்கினதான சொத்தாண்மையை அத்தகைய சம்மதமளிக்கும் கூட்டுச் சொந்தக்காரர்கள் சொந்தமாக வைத்துள்ளார்கள் என உறுதிப்படுத்தும் வகையில் இரத்தினக்கல் அகழ்தலுக்கான குத்தகைப்பற்று உரிமைகள் உட்பட காணியின் கூட்டுச்சொந்தக்காரர் ஒருவராகவிராத அத்தகைய ஆள் கூட்டுச் சொந்தக்காரர்களின் எழுத்திலான சம்மதத்தை பெற்றுக்கொண்டிருந்தாலேயொழிய,

அத்தகைய ஆளுக்கு உரிமமொன்று அளிக்கப்படுதலாகாது.

*03-666*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.